செ.வெ.எண். 20/ஜனவரி தருமபுரி மாவட்டம் தேதி : 11.01.2017

**பாலக்கோடு அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் 3827 மாணவியர்களுக்கு ரூ. 15 இலட்சத்து 57 ஆயிரம் மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் வழங்கினார்.**





தருமபுரி மாவட்டம், பாலக்கோடு அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ. 15 இலட்சத்து 57 ஆயிரம் மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகள் 3827 மாணவியர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் வழங்கி பேசியதாவது :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 2011-ம் ஆண்டு ஆட்சி பொறுப்பேற்றவுடன் அறிவித்த திட்டங்களில் ஒன்று விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டமாகும். இத்திட்டமானது தற்போது தடையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டத்தில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 3827 மாணவியர்களுக்கு ரூ. 15 இலட்சத்து 57 ஆயிரத்து 589 மதிப்பில் விலையில்லா மிதிவண்டிகளைப்பெற்று பயனடைந்துள்ளார்கள்.

மேலும், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழ்நாட்டில் மட்டும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கல்வித்துறைக்காக அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்து மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் மற்றும் மடிக்கணினி, இலவச பாடப்புத்தகங்கள், சீருடைகள், காலணிகள் என 14 வகையான பொருட்கள் வழங்கி வருகிறார்கள். நமது மாவட்டத்தில் 12-ம் வகுப்பு முடித்த மாணவ, மாணவியர்களுக்கு 90% பேர் கல்லூரியில் சேர்ந்துள்ளனர். மீதமுள்ள 10% பேரையும் ஒரு குழு அமைத்து அவர்களையும் கல்லூரியில் சேர்வதற்கு தேவையான உதவிகளை செய்து வருகிறது. தற்பொழுது தருமபுரி அரசு பாலிடெக்னிக் கல்லூரி 79 மாணவ, மாணவியர்களுக்கும் மற்றும் கடத்தூர் பாலிடெக்னிக் கல்லூரியில் 63 மாணவ, மாணவியர்களுக்கும் ஆக மொத்தம் 142 மாணவ, மாணவியர்களுக்கு ரூ. 21 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பில் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது. இதனை மாணவ, மாணவிகள் பயன்படுத்தி தங்களுடைய திறமையை வளர்த்து கொண்டு வாழ்வில் முன்னேற்றம் அடைய வேண்டும் என பள்ளி மாணவியர்களிடையே மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி. கே.பி. மகேஸ்வரி, கோட்டாட்சியர் திரு. இராமமூர்த்தி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. இரா. சண்முசுந்தரம், முன்னாள் மாவட்ட ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திரு. டி.ஆர். அன்பழகன், பாலக்கோடு சர்க்கலை ஆலை தலைவர் திரு. கே.வி. அரங்கநாதன், அண்ணா தொழிற்சங்கத் தலைவர் திரு. பழனிசாமி, உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.